(ஆ) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப் பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக் கிறேன்

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறி விப்பு :

1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்).

(அ) எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்;"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன்வடி வைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.